

பயணியின் பார்வையில் அங்கம் **22:** இலங்கை பத்திரிகை உலகிற்கு வாரிசைத்தந்திருக்கும் தாத்தாவும்

Written by - முருகபூபதி -
Friday, 06 October 2017 06:39 - Last Updated Friday, 06 October 2017 16:16

மாஸ்டர் சிவலிங்கம் தொடர்பாக கடந்த 22 ஆம் அங்கத்தில் எழுதியிருந்த குறிப்புகளில் 1964 ஆம் ஆண்டு யாழ். ஸ்ரான்லி கல்லூரியில் நான் படிக்கின்ற காலத்தில் வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலிருந்து வருகைதந்த மாணவர்களின் வள்ளி திருமணம் கூத்து அரங்காற்றுகையை ரசித்த தகவலை எழுதியிருந்தேன். அதனைப்படித்திருக்கும் தம்பிராஜா பவானந்தராஜா என்பவர் எழுதியிருந்த குறுஞ்செய்தியை பதிவுகள் இணைய இதழ் நடத்தும் நண்பர் கிரிதரன் எனக்கு அனுப்பியிருந்தார். குறிப்பிட்ட வள்ளிதிருமணம் கூத்தை மாணவர்களுக்கு பயிற்றுவித்தவர்தான் பவானந்தராஜாவின் தந்தையார் அண்ணாவியார் தம்பிராஜா. 1965 இல் யாழ். மகாஜனாக்கல்லூரியில் நடந்த அகில இலங்கை ரீதியிலான போட்டியிலும் அண்ணாவியார் தம்பிராஜாவின் குருக்கேத்திரன் போர் என்ற கூத்து முதல் பரிசுபெற்றதாகவும், பேராசிரியர் மௌனகுரு அவர்களும் தமது தந்தையாரிடம் கூத்து பயின்ற மாணவர்களில் ஒருவர் எனவும் அவரது செய்தி மேலும் தெரிவிக்கின்றது. 53 வருடங்களுக்கு முன்னர் பார்த்து ரசித்த வள்ளிதிருமணம் கூத்து எனக்கு நினைவிலிருக்கிறது. அதன் அண்ணாவியாரின் பெயர் மறந்துவிட்டது. நினைவுபடுத்திய அண்ணாவியார் மகனுக்கு நன்றி.

கடந்த காலங்களை நினைவுபடுத்தினால் இதுபோன்ற பல அரிய தகவல்களையும் அறிந்துகொள்ளமுடிகிறது. இதற்கு முன்னர் தொண்டமனாறில் வசிக்கும் குந்தவை என்ற படைப்பாளியைப் பற்றி எழுதியிருந்தபோதும், கனடாவிலிருந்து நகுலசிகாமணி என்ற அன்பர் தொடர்புகொண்டு, வல்வெட்டித்துறை ஆவணக்காப்பகத்தில் பேணப்படும் பெரிய நங்கூரத்தை வழங்கியவர் குந்தவைதான் எனவும் அவரது மூதாதையர்கள் வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவுக்கு கப்பலோட்டிய தமிழர்கள் என்ற தகவலையும் அறியத்தந்திருந்தார். அண்மையில் வெளியாகியிருக்கும் எனது சொல்லவேண்டிய கதைகள் நூலில் குந்தவை பற்றிய (நாற்சார் வீடு என்ற அங்கத்தில்) கதையில் நகுலசிகாமணியின் தகவலையும் சேர்த்துக்கொண்டேன்.

அன்று மட்டக்களப்பில் நண்பர் செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன், என்னை ஊடகப்பள்ளியில் பணியாற்றும் ஏற்கனவே எனக்கு நன்கு தெரிந்த பத்திரிகையாளர் அருள் சங்கீத்திடம் அழைத்துச்சென்றார். இவர் இலங்கையின் மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரத்தினத்தின் பேரனாவார். இருக்கிறம் என்ற இதழின் ஆசிரியர் குழுவிலிருந்தவர். 2011 மாநாட்டில்தான் இவர் எனக்கு அறிமுகமானார். அந்த ஆண்டு

1 / 4

பயணியின் பார்வையில் அங்கம் 22: இலங்கை பத்திரிகை உலகிற்கு வாரிசைத்தந்திருக்கும் தாத்தாவும்

Written by - முருகபூபதி -
Friday, 06 October 2017 06:39 - Last Updated Friday, 06 October 2017 16:16

வெளியான இருக்கிறம் இதழ்களின் பிரதிகளை எடுத்துவந்து மாநாட்டின் பேராளர்களுக்கு இலவசமாகவே வழங்கினார். அரசியல் சமூக, கலை, இலக்கிய விமர்சன இதழாக வெளியான இருக்கிறம் இணைய இதழாகவும் வெளியாகியிருக்கிறது.

கிழக்கு பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் அருள் சங்கீத் அந்த ஊடகப்பள்ளியிலும் விரிவுரையாற்றுகிறார். நான் வீரகேசரியில் பணியாற்றிய காலத்தில் இதுபோன்ற ஊடகப்பள்ளிகள் இருக்கவில்லை. இலங்கை மன்றக் கல்லூரிகளில் என்றாவது ஒரு நாள் ஊடகத்துறை சார்ந்த பயிலரங்குகள் மாத்திரமே நடைபெறும். தற்காலத்தில் நவீன தொழில்நுட்பம் சார்ந்து ஊடகத்துறையில் பல்வேறு மாற்றங்கள் வந்திருப்பதனால், ஊருக்கு ஊர் ஊடகப்பள்ளிகள் இயங்குகின்றன. ஒளிப்படத்துறையிலும் டிஜிட்டல் முறை வந்திருப்பதனால், இளம் தலைமுறையினர் இவற்றில் ஆர்வம் காண்பிக்கின்றனர்.

ஒரு காலத்தில் மருத்துவம், பொறியியல், சட்டம், கணக்கியல் முதலான துறைகளில் ஆர்வம் காண்பித்தார்கள். தமது பிள்ளைகளை டொக்டர்களாகவோ, எஞ்சினியர்களாகவோ, சட்டத்தரணிகளாகவோ, கணக்காளராகவோ வரவேண்டும் என்ற கனவுதான் எமது தமிழ் சமூகத்திடம் முன்பு நீடித்திருந்தது. காலம் மாறியது. தற்போது இலங்கைப் பாடசாலைகளில் ஊடகக் கல்வியும் (Media Studies) ஒரு பாடமாகியிருக்கிறது. இலங்கையில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். காணாமலாக்கப்பட்டார்கள். அச்சுறுத்தப்பட்டார்கள். அதனால் பலர் நாட்டைவிட்டும் வெளியேறினார்கள். எனினும், ஊடகத்துறை உயிரையும் பறிக்கும் எனத்தெரிந்தும் இன்று இலங்கையில் ஊடகப்பள்ளிகள் தோன்றியிருப்பது மிக முக்கியமான மாற்றம்தான். இலங்கையில் ஊருக்கு ஊர் ஊடக அமையங்களும் உருவாகியிருக்கின்றன. அன்று அருள் சங்கீத் தாம் பணியாற்றும் அந்த ஊடகப்பள்ளியின் வகுப்பறைகளை எமக்கு காண்பித்தார். ஒளிப்படக்கலை, பத்திரிகை பக்க வடிவமைப்பு, தொலைக்காட்சியில் எவ்வாறு பணியாற்றுவது முதலான பலதரப்பட்ட பயிற்சிகளுக்காக மாணவர்கள் இருபாலாரும் வருவது பற்றிச்சொன்னார்.

" தாத்தா எப்படி இருக்கிறார் ..?" என்று எங்கள் மூத்த பத்திரிகையாளர் 'கோபு' கோபாலரத்தினம் பற்றி விசாரித்தேன். அவர் மட்டக்களப்பில் தனது மகளிடம்தான் இருக்கிறார் என்று திருகோணமலையில் என்னைச் சந்தித்த டான் தொலைக்காட்சி 'ஈழநாடு' குகநாதன் சொல்லியிருந்தார். மட்டக்களப்பு வந்ததும் இருவரும் கோபுவை பார்க்கச் செல்வது என்றுதான் தீர்மானித்திருந்தோம். எனினும், குகநாதன் அவசரமாக அன்று காலை யாழ்ப்பாணம் செல்லவேண்டியிருந்தமையால், கோபாலகிருஷ்ணனுடன் அன்று மாலை கோபாலரத்தினத்தை பார்க்கச் சென்றேன். தாத்தா கடும் சுகவீனமுற்றிருப்பதாக பேரன் அருள் சங்கீத் சொன்னார். தற்பொழுது தங்களுடன்தான் இருப்பதாகவும் வீட்டுக்கு வருமாறும் அழைத்தார்.

2013 ஆம் ஆண்டு திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்கு புறப்பட்டபோது தொலைபேசி ஊடாக எனது வரவை கோபுவிடம் சொல்லிவிட்டு பயணத்தை தொடங்கியிருந்தாலும், இடையில் திருகோணமலை - மூதூர் பாதையில் வெள்ளம் பரவியிருந்தமையால் பெரிய சுற்றுச் சுற்றி நடு இரவில் அவரைக் காணச் சென்றிருக்கின்றேன். அந்த இரவில் எனக்காக உறங்காமல் விழித்திருந்து காத்திருந்த கோபு அவர்கள், இம்முறை பகல்பொழுதில் நான் சென்றிருந்தபோது, ஆழ்ந்த உறக்கத்தில் மட்டுமல்ல, எழுந்திருந்து நடக்கவும் முடியாமல் முடங்கியிருந்த காட்சி

2 / 4

பயணியின் பார்வையில் அங்கம் **22:** இலங்கை பத்திரிகை உலகிற்கு வாரிசைத்தந்திருக்கும் தாத்தாவும்

Written by - முருகபூபதி -
Friday, 06 October 2017 06:39 - Last Updated Friday, 06 October 2017 16:16

மனதை உலுக்கியது. முதுமை இயலாமையுடன் நோய் உபாதையும் அவரை பெரிதும் தாக்கியிருந்தமையால் பேசுவதற்கும் சுவாசிப்பதற்கும் சிரமப்பட்டார். அருள் சங்கீதத்தின் தாயார் (கோபுவின் மகள்) அவரை கைத்தாங்கலாக அழைத்து வந்து, " அப்பா... யார் வந்திருக்கிறார்... தெரிகிறதா...?" எனக்கேட்டாலும், அவரால் என்னை சிரமப்பட்டுத்தான் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. அவரை ஆசனத்தில் அமரவைத்துவிட்டு, நானும் கோபாலகிருஷ்ணனும் அருகே நெருக்கமாக அமர்ந்துகொண்டு உரையாடினோம்.

அவருடனான எனது நட்புறவு 1975 இல் ஆரம்பித்தது. மல்லிகை ஜீவாதான் இவரை எனக்கு யாழ்ப்பாணம் ஈழநாடு அலுவலகத்தில் அறிமுகப்படுத்தியவர். இவரும் வீரகேசரியில் 1953 இல் ஒப்புநோக்காளராகவே இணைந்தவர். பின்னாளில் பத்திரிகையாளர்களாகவும் படைப்பிலக்கியவாதிகளாகவும் உருவானவர்களில் பலர் தொடக்கத்தில் அச்சுக்கோப்பாளர்களாகவும் ஒப்புநோக்காளர்களாகவுமே இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் சிலம்புச்செல்வர் மா.பொ.சி., ஜெயகாந்தன், விந்தன் ஆகியோரும் இலங்கையில் கோபாலரத்தினம், ஸி.எஸ். காந்தி, மலைத்தம்பி ஆகியோரும் 1983 இற்குப்பின்னர் நானும் நண்பர் வீரகத்தி தனபாலசிங்கம், பிரணதார்த்திஹரன் , சிவராஜா, அற்புதானந்தன் ஆகியோரும் பத்திரிகையாளர்களாக மாறியிருக்கின்றோம். இந்தத் தகவல் பின்னணி எமக்கு இருப்பதனால் கோபுவிடத்தில் எனக்கு மரியாதை அதிகம். இவர் பற்றி நான் முன்பொருதடவை எழுதிய குறிப்புகள் நினைவுக்கு வருகின்றன.

கோபுவும் 1953 இல் வீரகேசரி பத்திரிகையில் ஒரு ஒப்புநோக்காளராகவே பணியில் அமர்ந்தார். பின்னர், ஆசிரியபீடத்தில் இணைந்து ஒரேசமயத்தில் அலுவலக நிருபராகவும் துணைஆசிரியராகவும் பணியாற்றி பத்திரிகையாளனாக உருவானார். அப்பொழுது அவர் பெற்ற மாதச்சம்பளம் 72 ரூபாதான். 1960 இல் வீரகேசரியில் நடந்த வேலைநிறுத்தத்தின்போது அந்த வேலையை இழந்து யாழ்ப்பாணம் சென்று ஈழநாடு பத்திரிகையில் இணைந்தார். கோபு, வீரகேசரி, ஈழநாடு, ஆகியனவற்றில் மாத்திரமின்றி ஈழமுரசு, தினகதிர், செய்திக்கதிர், ஈழநாதம், சுடரொளி முதலான பத்திரிகைகளிலும் பணியாற்றியவர்.

3 / 4



பயணியின் பார்வையில் அங்கம் **22:** இலங்கை பத்திரிகை உலகிற்கு வாரிசைத்தந்திருக்கும் தாத்தாவும்

Written by - முருகபூபதி -
Friday, 06 October 2017 06:39 - Last Updated Friday, 06 October 2017 16:16

ஈழ மண்ணில்
ஓர் இந்தியச்
எஸ்.எம்.கோபாலரத்தினம்

[illegible]

4 / 4